
# நமது தின கனி

**NAMADHU DHINA KANI** Daily Morning

| Vol: 01 | Issue: 271 | 4 Pages | 5.5.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 271 | 4 பக்கங்கள் | 5.5.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 86 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள புதிய கோளில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிப்பு



அபுதாபி, மே.5

பூமியில் இருந்து சுமார் 86 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள புதிய கோளில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அபுதாபி நியூயார்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அரிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து அரசு செய்திக்குறிப்பில் வெளியிடப்பட்டுள்ளதாவது:

அபுதாபி நியூயார்க் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் ஜாஸ்மினா பிலெசிக், பேராசிரியர் இயன் டாப்ஸ் டிக்சன் மற்றும் குழுவினர் இணைந்து நாசாவின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி மூலம் ஆராய்ச்சி செய்துவந்தனர். இதில் பூமியில் இருந்து சுமார் 86 ஒளி ஆண்டுகள் (ஒளி 1 ஆண்டில் பயணம் செய்யும் தூரம்) தொலைவில் உள்ள டபள்யூ.ஏ.எஸ்.பி 43பி என்ற புதிய கோள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கோள் சூரிய குடும்பத்தில் உள்ள வியாழன் கிரகத்தை போன்று அதே நிறையுடையதாக உள்ளது. இந்த கோள் சூரியன் போல் ஒரு நட்சத்திரத்தை சுற்றி வருகிறது. மிக நெருக்கமாக அந்த நட்சத்திரத்தை சுற்றி வருவதால் அந்த கோளுக்கு ஒரு ஆண்டு என்பது 19 ½ மணி நேரம் மட்டுமே ஆகும். பூமி சூரியனை சுற்றி வருவதற்கு 365 நாட்கள் எடுத்துக்கொள்கிறது. நெருக்கமாக அந்த கோள் தனது நட்சத்திரத்தை சுற்றி வரும்போது அதன் சுழற்சியானது அதன் சுற்றுப்பாதையுடன் இணைந்து செல்கிறது. அதாவது நமது பூமியை நிலவு சுற்றி வருவதுபோல அந்த கோள் தனது நட்சத்திரத்தை சுற்றி வருகிறது. இதன் காரணமாக கோளின் ஒரு பாதி நிரந்தரமாக ஒளிரும் (பகலாகவே இருக்கும்). மற்றொரு பாதி நிரந்தரமாக இருள்சூழ்ந்ததாகவும், மிகவும் குளிர்ந்த நிலையிலும் உள்ளது.

இந்த கோளில் அடர்த்தியான மேகங்கள் காணப்படுகிறது. மேலும் அதன் இருள் சூழ்ந்த பகுதியின் ஆச்சர்யபடத்தக்க வகையில் வளிமண்டலத்தில் மீத்தேன் கிடையாது. அதற்கு பதிலாக எங்கு பார்த்தாலும் தண்ணீர் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பூமியில் உள்ள மேகங்களை விட அதிக உயரத்தில் இந்த கோளில் மேகங்கள் காணப்படுகிறது. இந்த டபள்யூ.ஏ.எஸ்.பி 43பி கோளின் நிரந்தரமாக ஒளிரும் பகுதியின் வெப்பநிலை 1,250 டிகிரி செல்சியசாக உள்ளது.

அதேபோல இருள் சூழ்ந்த பகுதியில் 600 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவுகிறது. இருள் சூழ்ந்த பகுதியில் நேரடி சூரிய ஒளி இல்லாத காரணத்தால் இரவு மற்றும் பகல் நிலவும் பகுதிகளுக்கு இடையே வெப்பநிலை வேறுபாடுகளை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக வலுவான காற்று அங்கு உருவாக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## துபாயில் 75 ஆண்டுகளுக்கு பிறகு பெய்யும் வரலாறு காணாத மழையால் பொதுமக்கள் தவிப்பு



துபாய், மே.5

ஐக்கிய அரபு எமிரேட்சில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பலத்த மழை கொட்டியது. இதனால் துபாய், அபுதாபி, சார்ஜா போன்ற நகரங்கள் வெள்ளத்தில் மிதந்தன. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியது.

இந்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் படிப்படியாக குறைந்து வந்த நிலையில் நேற்று மீண்டும் துபாய் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் மழை வெளுத்து வாங்கியது. பலத்த சூறாவளி காற்றுடன் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் தாழ்வான பகுதியில் வெள்ளம் சூழ்ந்தது. சாலைகள், நடைமேடைகள், சுரங்க பாதைகள் என அனைத்திலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து முடங்கி போய் உள்ளது.

தேங்கி கிடக்கும் மழைநீரில் வாகனங்கள் தத்தளித்த படி சென்றன. துபாய் சர்வதேச விமான நிலைய ஓடுபாதையில் தண்ணீர் ஆறு போல ஓடியதால் விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளில் இருந்து துபாய் வந்த விமானங்கள் திருப்பி விடப்பட்டன.

துபாயில் இருந்து மற்ற நாடுகளுக்கு செல்லும் 15க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. இதன் காரணமாக விமான நிலையத்தில் பயணிகள் கடும் தவிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

2வது நாளாக தொடர்ந்து துபாயில் மழை பெய்து வருவதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. இரவு நேரம் சூறாவளி காற்று வீசுகிறது. இடைவிடாத மழையால் பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கி உள்ளனர். ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பள்ளி, கல்லூரிகளில் நேரடி வகுப்புகள் ரத்து செய்யப்பட்டு ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடந்து வருகிறது.

துறைமுகம் மற்றும் பூங்காக்களை தற்காலிகமாக மூட உத்தரவிடப்பட்டு உள்ளது. சார்ஜாவில் மழையால் பஸ் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. இன்றும் மழை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

துபாய் போன்ற நகரங்களில் முறையான வடிகால் வசதிகள் இல்லாததால் வெள்ளம் வடிவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதுவும் பொதுமக்களை அவதிக்குள்ளாக்கி இருக்கிறது.

இதுவரை கடும் வறட்சியால் செயற்கை மழையை உருவாக்கி வந்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தற்போது இயற்கை மழையால் தத்தளித்து வருகிறது. கடந்த 75 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது வரலாறு காணாத வகையில் பேய் மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

கால நிலை மாற்றத்தால் வருங்காலங்களில் வளைகுடா நாடுகளில் வெப்பம் மேலும் அதிகரித்து வெப்ப சலனம் காரணமாக கன மழை பெய்யும் என்றும், வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கொடைக்கானலில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை திரும்பினார்

கொடைக்கானல், மே.5

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மனைவி துர்கா ஸ்டாலின் மற்றும் குடும்பத்தினருடன் ஓய்வு எடுப்பதற்காக கொடைக்கானலுக்கு கடந்த 29ந்தேதி வந்தார். கொடைக்கானல் பாம்பார்புரத்தில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் அவர் தங்கி இருந்தார்.

மறுநாள் பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள கோல்ப் கிளப் மைதானத்தில் நடைபயிற்சி மேற்கொண்டார். அத்துடன் கோல்ப் விளையாடினார். அப்போது அங்கு திரண்ட பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை சந்தித்தார். அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

இந்தநிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்தினருடன் நேற்று மாலை 3.40 மணி அளவில் விடுதியில்



இருந்து காரில் புறப்பட்டார். வத்தலக்குண்டு பிரதான மலைப்பாதை வழியாக அவர் மதுரைக்கு சென்றார். முதலமைச்சர் செல்லும் வழியில் தி.மு.க. நிர்வாகிகள் வரவேற்று கையசைத்தனர். அப்போது அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தபடி அவர் சென்றார்.

பெருமாள்மலையில், பழனி மலைப்பாதை பிரிவு பகுதியில் முதலமைச்சர் வந்தபோது, சாலையோரம் பொதுமக்கள் சிலா் நின்று கொண்டு வரவேற்றனர்.

அப்போது காரை நிறுத்திய அவர், பொதுமக்களை சந்தித்தார். அவர்களிடம் இருந்து புத்தகங்கள் மற்றும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். பின்னர் அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர், மதுரை விமான நிலையத்துக்கு சென்றார். அங்கிருந்து தனி விமானம் மூலம் சென்னை திரும்பினார்.

# வனவிலங்குகளின் தாகம் தீர்க்க வனப்பகுதி தொட்டிகளில் தண்ணீர் நிரப்பும் பணி தீவிரம்

உடுமலை, மே.5

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உடுமலை அமராவதி வனச்சரகங்கள் உள்ளன. இங்கு யானை, புலி, சிறுத்தை, செந்நாய், காட்டெருமை, காட்டுப்பன்றி, கடமான் உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் உள்ளன.

கோடை காலத்தில் வனப்பகுதி வறட்சியின் பிடியில் சிக்குவதால் ஆறுகள் வறண்டு போகிறது. இதனால் வனவிலங்குகளுக்கு கோடை காலத்தில் உணவு, தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து தாகத்தோடு தண்ணீரை தேடி மலை அடிவாரப்பகுதியை நோக்கி வந்து விடுகிறது.

கடந்த சில வாரமாக வனப்பகுதியில் கோடை வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக மரங்கள், செடிகள், புற்



கள் உள்ளிட்டவை காய்ந்து விட்டது. இதனால் வனவிலங்குகளுக்கு தேவையான உணவு, தண்ணீர் கிடைக்கவில்லை. அவை மலை அடிவாரப் பகுதியை நோக்கி படையெடுத்த வந்த வண்ணம் உள்ளன.

எனவே வனவிலங்குகளின் தாகம் தீர்க்க ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் உடுமலை வனத்துறை சார்பில் தண்ணீர் நிரப்பும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் வனவிலங்குகள் தண்ணீரை குடித்துவிட்டு சென்று விடுகிறது.

அத்துடன் உடுமலை மூணாறு சாலையை வனவிலங்குகள கடந்து அணைப்பகுதிக்கு செல்வதும் சற்று குறைந்து உள்ளது. வனவிலங்குகளுக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதால் தாகத்தை தீர்ப்பதற்காக விளை நிலங்களை தேடி செல்ல வேண்டிய நிலையும் வனவிலங்களுக்கு குறைந்துள்ளது. வனவிலங்குகள் சாலையை கடக்கும் சூழல் ஏற்பட்டால் வாகனங்களை பொறுமை காத்து இயக்குமாறும், வனவிலங்குகளை தொந்தரவு செய்ய வேண்டாம் எனவும் வாகன ஓட்டிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

# பொய் வழக்குகளால் முடக்க முயற்சிப்பது தி.மு.க.விற்கே உரித்தான பாசிச குணம்: எடப்பாடி பழனிசாமி தாக்கு

சென்னை, மே.5



சவுக்கு சங்கர் கைதுக்கு தமிழக எதிர்க்கட்சித்தலைவரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:

தி.மு.க., அரசின் ஊழல்களை தொடர்ந்து மக்களிடத்தில் அம்பலப்படுத்தும் சவுக்கு மீடியா ஊடகத்தை முடக்கும் முனைப்பில் அந்நிறுவன ஊழியர்கள் மற்றும் வாசகர்களை குறிவைத்து காவல் துறையை ஏவி பொய் வழக்குகளில் கைது செய்யும் அரசின் அராஜகப் போக்கிற்கு எனது கண்டனம்.

ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளை தன் கைகளுள் வைத்துக்கொண்டு, தான் ஏதோ நல்லாட்சி வழங்குவது போல ஒரு பொய் பிம்பத்தை உருவாக்கி, அந்த மாய உலகத்தில் ஸ்டாலின் திளைத்து கொண்டிருப்பதை நான் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளேன். அதனையும் மீறி சில ஊடகங்கள் இந்த விடியா ஆட்சியின் அவலங்களை மக்களிடத்தில் அம்பலபடுத்தினால், தன் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல் துறையை ஏவி பொய் வழக்குகளால் முடக்க முயற்சிப்பது தி.மு.க.விற்கே உரித்தான அராஜக பாசிச குணம்.

சவுக்கு மீடியாவின் ஊழியர்கள் மற்றும் வாசகர்கள்மீதான அரசியல் காழ்ப்புணர்ச்சி ஏவல்களை உடனடியாக கைவிட்டு, மக்களாட்சியின் நான்காம் தூணான ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளின் சுதந்திரமான செயல்பாட்டை உறுதி செய்யுமாறு தி.மு.க., அரசின் முதல்வரை வலியுறுத்துகிறேன் என பதிவிட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி பெண்கள் கிளைச்சிறையில் கூடுதல் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட கலெக்டர் சரயு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கிருஷ்ணகிரி துணை காவல் கண்காணிப்பாளர் தமிழரசி, கிளைச்சிறை கண்காணிப்பாளர் செந்திழரசி, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் சுப்பிரமணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருச்சி வேளாண் கல்லூரி மாணவிகள் அத்திவெட்டி வேளாண்மை பற்றி கலந்துரையாடல்




திருச்சி, மே.5

திருச்சி அன்பில் தர்ம லிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் அத்திவெட்டி தென்னை இயற்கைவழி வேளாண்மை குழு விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடத்தினர். தஞ்சாவூர் மாவட்டம்,மதுக்கூர் ஒன்றியம், அத்திவெட்டி கிராமத்தில் வேளாண் கல்லூரி மாணவிகள் ஊரக வேளாண் பணி வாயிலாக இயற்கை வழிவேளாண்மைகுறித்து தென்னை இயற்கைவழி வேளாண்மை குழுவின் தலைவர் மற்றும் நம்மாழ்வாரின் 'வானகம்' அமைப்பின்மூலம் நேரடி பயிற்சி பெற்றவர் வைரவமூர்த்தி,செயலாளர் பால சுப்பிரமணியம், பொருளாளர் வடிவேல்மூர்த்தி மற்றும் நல்லசிவம், மணி முத்து ஆகியோரிடம் கலந்துரையாடினர். பஞ்சகவ்யம்,அமிர்தக்கரைசல், உப்புக்கரைசல், மீன் அமிலம்,

பூச்சிவிரட்டி மற்றும் எருக்குக்கரைசல் ஆகியவற்றின்செய்முறை,பயன்படுத்தும் முறை மற்றும் பயன்கள் குறித்துக் கேட்டறிந்தனர்.

Below Picture : மதுக்கூர் ஒன்றியம், அத்திவெட்டி கிராமத்தில் திருச்சி வேளாண் கல்லூரி மாணவிகள் இயற்கை வழிவேளாண்மைகுறித்து விவசாயிகளுடன் கேட்டறிந்தனர்.

# செஞ்சி வட்டம் தேவதானம் பேட்டையில் சிறப்பு கண் பரிசோதனை பொது மருத்துவ முகாம்




செஞ்சி மே 05

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் தேவதானம் பேட்டையில் சிறப்பு கண் பரிசோதனை பொது மருத்துவ முகாம் தேவதானம் பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் செஞ்சி ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது விழுப்புரம் மாவட்டம் பார்வையிழப்பு தடுப்பு சங்கம் மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பாண்டிச்சேரி இணைந்து நடத்திய சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது இந்த மருத்துவ முகாமில் அனைத்து பொது மக்களுக்கும் இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டது

பரிசோதனையில் கண் புரை சிகிச்சை கண்ணில் நீர் வடிதல் கண்ணில் சதை வளர்ச்சி தூரப்பார்வை பார்வை மங்கி போதல் தலைவலி ஒற்றைத் தலைவலி இன்னும் பலவித நோய்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது இதில் இலவச மருத்துவ காப்பீடு வசதியும் கண் கண்ணாடி குறைந்த விலையில் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

# குளித்தலை நகரை இரண்டாகப் பிரித்து வழங்கும் மின் பகிர்மானக் குளறுபடியால் பொதுமக்கள் கடும் அவதி



கரூர், மே.5

பல ரூபாய் மதிப்புள்ள மின் சாதன பொருட்கள் சேதமடையும் அபாய நிலை ஏற்பட்டு உள்ளது குளித்தலை கரூர் மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாக உள்ளது. இதில் பலதரப்பட்ட மக்கள் அரசு அலுவலர்கள்› வணிக பெருமக்கள்› விவசாயிகள் என பலதரப்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள்.

இந்நிலையில் குளித்தலை நகரில் மின் பகிரமானத்தின் மூலம் ஏற்பட்ட குளறுபடியால் குளித்தலை நகரை இரண்டாகப் பிரித்து அய்யர்மலை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து ஒரு பகுதியும் பெட்டவாய்த்தலை மின் உற்பத்தியில் இருந்து ஒரு பகுதியும் என இரண்டாக பிரித்து குளித்தலை நகருக்குள் மின் விநியோகம் செய்யப்படுகிறது. அய்யர்மலையிலிருந்து வழங்கப்படக்கூடிய மின் விநியோகம் சீராகவும் போதுமான அளவு இருப்பதால் மிக சரியாக ஒரு பக்கத்தில் அமைந்துள்ளது. அதே நேரத்தில் பெட்டவாய்த் தலையிலிருந்து வழங்கப்படக் கூடிய மின் இணைப்பில் ஏற்படக்கூடிய மின் தாழ்வு நிலை காரணமாக குளித்தலை பகுதியில் அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், பொதுமக்கள் வசிக்கக் கூடிய பகுதியில் பகல் மற்றும் இரவு நேரங்களில் தாழ்நிலை மின் அழுத்தத்தால் பொதுமக்கள் பலர் அவதிப்படுகிறார்கள் மருத்துவமனைகளில் பிரசவ பணிகள் ற்கொள்ளும் மருத்துவர்கள் கடும் அவதிப்படுவதுடன் இந்த மின் தடையால் உயிர் சேதம் ஏற்படக்கூடிய நிலையும் அமைந்துள்ளது.

மேலும்› பிரசவம் அடைந்த சிறு குழந்தைகளை வைத்துக்கொண்டு தாய்மார்கள் கடும் அவதிப்படக்கூடிய கொடுமையான நிலையும் ஏற்பட்டுள்ளது. இதே போன்று இறந்தவர்களின் உடலை வைக்கக்கூடிய அந்த குளிர்சாதன பெட்டிகள் கூட பயன்படுத்த டியாத அளவிற்கு மின்தடை ஏற்பட்டு பொதுமக்கள் கடும் அவம்› அதிருப்தியும் அடைந்து உள்ளனர். குளித்தலை பகுதியில் இந்த தாழ்வு மின்சாரத்தை பற்றி எந்த அதிகாரிகளும் துரித நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருக்கிறார்கள் என பொதுமக்கள் கருதுகிறார்கள். மேலும்› தற்போது கடுமையான கோடைகாலமும் கத்திரி வெயில் அடிக்கக்கூடிய சூழ்நிலையில் குளித்தலையில் உடனடியாக மிகச் சரியான மின்சாதன உபகரணங்களை பயன்படுத்தி முறையான மின் விநியோகம் கிடைத்திட செய்திடுவதுடன் குளித்தலை நகரம் முழுவதும் அய்யர்மலை துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் கிடைத்திடச் செய்திடுவதுடன் மின்விநியோகத்தை சீர் செய்யும் முயற்சியில் அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டிட வேண்டும். இல்லையென்றால்› பொதுமக்கள் ஒன்று திரண்டு பெரும் போராட்டத்தில் ஈடுபடக்கூடிய நிலையும் ஏற்படும். எனவே› அசாதாரண நிலையும் அரசுக்கு அவப்பெயரும் ஏற்படுவதை தடுத்திடும் வகையில் துரித நடவடிக்கையில் மின்வாரிய அதிகாரிகள் செயல்பட்டிட வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# சவுக்கு சங்கரை அழைத்துச் சென்ற வேன் தாராபுரத்தில் விபத்து




தாராபுரம், மே.5

பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்களை பதிவிட்டு வரும் யூடூபர் சவுக்கு சங்கரை அழைத்துச் செல்லப்பட்ட வாகனம் தாராபுரத்தில் விபத்தில் சிக்கியது.

பிரபல யூட்யூபர் சவுக்கு சங்கர் இவர் எப்போதும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தனது யூடுப்பில் பரிமாறி கொள்வது இவரது வழக்கம். ஆனால் இவர் பரிமாறும் கருத்துக்களில் எந்த அளவு உண்மை உள்ளது என்பது யாருக்கும் தெரியாது .இவ்வாறு இருக்கையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த சவுக்கு சங்கர் காவல் துறையில் பணியாற்றுபவர்களை பற்றி ஒரு கருத்தை, அதாவது சர்ச்சைக்குரிய கருத்தை, தன்னுடைய சேனலில் வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதன் அடிப்படையில்

அவர் மீது வழக்கு பதிவு செய்த தமிழ்நாடு காவல் துறையினர் அவரை தேடி வந்த நிலையில், சவுக்கு சங்கர் தேனி மாவட்டத்தில் பதுங்கி இருப்பதாக தெரியவந்ததையடுத்து, அங்கு சென்ற தமிழ்நாடு காவல் துறையினர் அவரை கைது செய்து கோவை மாவட்டத்திற்கு அழைத்துச் சென்ற பொழுது, திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள ஐடிஐ கார்னர் பகுதியில் சவுக்கு சங்கரை அழைத்துச் சென்ற வாகனம் அந்த வழியாக சென்ற பொழுது, தாராபுரம் தெக்காலுரை சேர்ந்த ஒருவர் ஒரு காரை ஓட்டிக்கொண்டு பைபாஸ் சாலையை கடக்க முயற்சித்த பொழுது சவுக்கு சங்கரை அழைத்து வந்த வாகனம் அந்த காரின் மீது மோதியதாக கூறப்படுகிறது. இந்த விபத்தில் அந்தக் காரை ஓட்டி வந்த நபரும் சவுக்கு சங்கர் மற்றும் அவருடன் வந்த போலீசாரும் காயமடைந்ததாக கூறப்படுகிறது. காயமடைந்த அனைவருக்கும் தாராபுரம் தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக கோயமுத்தூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வருமான வரி கூடுதல் ஆணையர் பங்கேற்பு




சேலம், மே.5

சேலம் மாவட்டம் அரியானூர் அருகே அமைந்துள்ள விநாயகா மிஷன் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் விளையாட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்வானது மாணவ பேரவை அமைப்பின் மூலம் நடத்தப்பட்டது. இதில் துறையின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக சேலம் வருமான வரி கூடுதல் ஆணையர் மற்றும் அலுவலகத்தின் வருமான வரி ஆய்வாளரும் சர்வ தேச கபடி வீரருமானமுருகானந்தம் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளர்களாக சேலம் வருமான வரி கூடுதல் ஆணையர் அலுவலகத்தின் வருமான வரி அதிகாரி தேசியக் கபடி வீரர் ராஜ்குமார் மற்றும் அகில இந்திய தடகள வீராங்கனை மற்றும் கேலோ இந்தியா வீராங்கனை பவித்ரா ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து விளையாட்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் களையும், பதக்கங்களையும் வழங்கினர். மேலும் அனைத்து போட்டியிலும் சிறப்பாக பங்கேற்று முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற அணிகளுக்கு ஒட்டுமொத்த கோப்பையும் வழங்கப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் உடற்பயிற்சி இயக்குனர்கள் முனைவர் ஜெயபாரதி மற்றும் சூர்யா துறை பேராசிரியர்கள் மாணவ பேரவை உறுப்பினர்கள் என அனைவரும் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஊட்டியின் நிலவும் அதிக வெப்பத்தால் நோய்கள் பரவ வாய்ப்பு ஜெ.எஸ்.எஸ் மருந்தாக்கியல் கல்லூரியின் முப்பெரும் விழாவில் எச்சரிக்கை




ஊட்டி, மே.5

ஊட்டி ஜெ.எஸ்.எஸ் மருந்தாக்கியல் கல்லூரியில் ஆண்டு விழா, பரிசளிப்பு விழா மற்றும் முன்னாள் மாணவர்களின் சந்திப்பு என முப்பெரும் விழா நடைபெற்றது.

விழாவில் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ்.பி. தனபால் அனைவரையும் வரவேற்றார். முனைவர்கள் கே.பி. அருண்,சத்திய ரெட்டி ஆகியோர் கல்லூரி ஆண்டறிக்கையை வழங்கினர். நிகழ்வில் கல்லூரியின் ஆண்டு மலரான பார்ம சாகா 30வது தொகுப்பு வெளியிடபட்டது விளக்கினார்.

ஜெ எஸ் எஸ் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வி குழுமத்தின் வேந்தர் ஜெகத்குரு ஸ்ரீ.ஸ்ரீ.ஸ்ரீ தேசிகேந்திர மகா சுவாமிஜி விழாவில் கலந்துகொண்டு விழா சிறக்க வாழ்த்துக்கள் வழங்கினர்.

ஜெ எஸ் எஸ் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வி குழுமத்தின் இணை வேந்தர் முனைவர் பி சுரேஷ் பேசுகையில் இது போன்ற தலைசிறந்த கல்லூரியில் சேர்ததற்கு பெருமை படவேண்டும் மேலும் அனைத்து பழைய மாணவர்களுக்கும் கல்லூரிக்கு வந்து கல்லூரியையும் தங்களையும் பெருமை படுத்தவேண்டும் என கூறினார். டாக்டர் கே மாதேஸ்வரன் தனது சிறப்பு விருந்தினர் உரையில் கல்லூரி ஆண்டு அறிக்கை பார்க்கும் போது மகிழ்ச்சி அளிப்பதாகவும் , கோவையில் சிறந்த மருத்துவமனையை தொடங்கியதும் மருத்துவ துறையில் மருத்துவமணிகளில் ஏற்படும் தொற்றுகளையும் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக இருந்ததாகவும், இதனை கட்டுபடுத்த மருந்தாலுணர்களே சிறந்த மருந்தாக இருந்ததாக கூறினார். இன்னும் அதிக மருந்தலுணர்கள் இந்த பணியில் ஈடுபடுத்தி கட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பதாக கூறினார். அடுததக்க காலநிலையில் ஏற்படும் மாற்றங்களும் கவலை அளிப்பதாகவும் இதனை சரிசெய்ய மரங்களை நடவேண்டும் என்றும், புவியை சிறந்த வாழும் இடமாக நமது வருங்கால சந்ததினர்க்கு தரவேண்டும் என கூறினார். மேலும் கல்லூரியின் முன்னேற்றத்தில் மகிழ்வதாகவும் கூறினார்.

சென்னையில் உள்ள போர்டஸ் இந்தியா நிறுவனத்தின் சர்வதேச விற்பனை பகுதியின் சேர்மன் டி காயத்திரி வீரமணி ஜெயராம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் இருப்பது வருடங்களுக்கு முன்பு வரும்போது ஜெ எஸ் எஸ் பார்மசி கல்லூரி ஆராய்ச்சியில் சிறந்து விளங்கியது எனவும் இன்று இன்னும் சிறப்பாக செயல்படுவதாக கூறினார். இந்த உலகத்தில் இருப்பவர்கள் முன்னேறுவதில் யாரும் தடை செய்யவில்லை என்றும், நம்க்கு நாமே தடையாக இருப்பதாகவும் எனவே தடையை தாண்டி நாம் முன்னேற வேண்டும் என்று கூறினார். இந்தியா உலக அள வில் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிப்தாகவும் கூறினார். நிறைவாக தனிமனித ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். டாக்டர் எம் கீதாஞ்சலி, ஊட்டி அரசு மருத்துவ கல்லூரியின் முதல்வர் பேசுகையில் ஜெ எஸ் எஸ் மருத்துவ கல்லூரி அரசு மருத்துவ கல்லூரியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் அதனை சிறப்பாக பயன்படுத்தப்படுவதாக கூறினார். தனிமனித முன்னேற்றம் மிகவும் முக்கியமானதாக இருக்கவேண்டும் என கூறினார். கல்லூரியில் மாணவர்கள் தனது முன்னேற்றத்திற்கான பழக்கங்களை பழக வேண்டும் என கூறினார்.

அமெரிக்கா நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பொது கணக்காளராக இருக்கும் ஷாலினி குப்தா பேசுகையில் கல்லூரியின் ஆராய்ச்சி சார்ந்த அமைப்பு சிறப்பாக இருப்பதாக தெரிவித்தார். மைசூரில் உள்ள ஜெய் எஸ் எஸ் மகா வித்யா பீடத்தின் நிர்வாக செயலாளர், தனது தலைமை விருந்தினர் உரையில் இந்த கல்லூரியில் இருந்து வெளியேறும் அனைத்து மாணவர்களும் சமூகத்திற்கு தேவையான அனைத்து திறமைகளையும் பெற்று வெளியேறுவதாக கூறினார். மாணவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறினார். இந்த நூற்றாண்டு பெரிய மாற்றத்திற்கான நூற்றாண்டாக அமைந்து இருப்பதாகவும், எனவே கல்வியில் பெரிய மாற்றம் ஏற்படுத்த மாணவர்கள் தங்களை தயார்படுத்திகொள்ள வேண்டும் என் கூறினார்.

தமிழ்நாடு டாக்டர் எம் ஜி ஆர் மெடிக்கல் பல்கலைகழக துணைவேந்தர் முனைவர் கே நாராயணசாமி முக்கிய விருந்தினராக கலந்து கொண்டார். விழாவில் பேசுகையில் விருது பெரும் அனைவரையும் வாழ்த்தினார். இந்த வருடம் நிலகிரி மாவட்டமும் வெப்ப அலைக்கு தப்பவில்லை எனக்கூறினார். மேலும் இந்த வருடம் நீலகிரி மாவட்டமும் இந்த வெப்பதால் ஏற்படும் நோய்களும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார்.

இன்றைய சூழலில் மருத்துவ துறையில் மருந்தலுணர்களின் பங்கு மிக முக்கியமாக இருப்பதாக கூறினார். செயற்கை நுண்ணறிவு மருத்துவ துறையின் முன்னேற்றத்திலும் மருந்து தயாரிப்பு துறையிலும், மருத்துவ சேவை வழங்குவதிலும் மிக முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

மேலும் இந்த கல்லூரியில் படித்த படிகும் மாணவர்கள் அனைவரும் தற்போது ஏற்படும் மாற்றங்களை கருத்தில் கொண்டு வருங்கால ஆராய்ச்சி மாணவர்கள் சிறந்த ஆராய்ச்சி செய்து சமூகத்தின் தேவையை பூர்த்திசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அனைத்து துறை ஆராய்ச்சி மாணவர்களும் மாற்று மருதுவதுறையுடன் இணைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தினர். விழாவில் சிறந்த மாணவர்கள், ஆசிரியர்கள் , அலுவலர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப் பட்டது. முப்பெரும் விழா நிகழ்வுகளை பேராசிரியர்கள் முனைவர் டி.கே.பிரவின்,முனைவர் சண்முகம் உள்ளிட்டோர் சிறப்பாக ஒருங்கிணைத்தனர் முடிவில் பேராசிரியர் பிரியங்கா நன்றி கூறினார்

# பெரியமேடு பகுதியில் உள்ள லாட்ஜில் பாலியல் தொழில் நடத்திய வடமாநில நபர் கைது: 2 பெண்கள் மீட்பு

சென்னை, மே.5

சென்னையில் வேலை தேடி கொண்டிருக்கும் பெண்கள் மற்றும் சென்னை நகருக்கு வேலை தேடி வரும் அப்பாவி இளம் பெண்களிடம் தனியார் நிறுவனங்களில் நல்ல சம்பளத்தில் வேலை வாங்கித் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி, அவர்களை அழைத்துச் சென்று கட்டாயப்படுத்தி விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தி, பணம் சம்பாதிக்கும் குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்க சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், உத்தரவிட்டதின் பேரில், காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான தனிப்படையினர் ரகசியமாக கண்காணித்து மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபடும் விபச்சார தரகர்களை கைது செய்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, விபச்சார தடுப்புப் பிரிவு 1 காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் காலை, சென்னை, பெரியமேடு, வேப்பேரி நெடுஞ்சாலையிலுள்ள ஒரு லாட்ஜில் உள்ள ஒரு அறையை கண்காணித்தபோது, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்தியது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், பெண் காவலர்கள் உள்ளிட்ட காவல் குழுவினர் மேற்படி அறையில் சோதனைகள் மேற்கொண்டு, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய தபாஸ் ரௌட் (எ) சிவா, வ/19, த/பெ.பிரசாந்த்குமார் ரௌட், பலேஸ்வர், ஒடிசா மாநிலம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த வைத்திருந்த 2 பெண்கள் மீட்கப்பட்டனர். மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு நபரை பிடிக்க காவல் குழுவினர் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட எதிரி தபாஸ் ரௌட் (எ) சிவா விசாரணைக்குப் பின்னர் நேற்று (03.05.2024) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட் டார். மீட்கப்பட்ட 2 பெண்கள் அரசு மகளிர் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

# வெப்ப அலையால் புதிய உச்சம் : தமிழகத்தின் மின் தேவை 20,830 மெகாவாட்

சென்னை, மே.5

கோடை வெயில் இந்த ஆண்டு மக்களை பாடாய் படுத்தி வருகிறது. கடந்த பிப்ரவரி மாத இறுதியில் வெயில் சுட்டெரிக்க தொடங்கியது. ஏப்ரல் மாதம் முழுவதும் வெயில் உக்கிரமாக இருந்தது. இதனால், மக்கள் கடும் அவதிபட்டு வந்தனர்.

பல உள் மாவட்டங்களில் வெப்பத்தின் தாக்கம் மிக அதிகமாகவே காணப்படுகிறது. இயல்பை விட இந்த ஆண்டு மிக அதிகமாக வெப்பம் நிலவியதால் மக்கள் தவித்து வருகிறார்கள். கோடை வெயிலில் இருந்து தப்பிக்க மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.




வெப்பத்தின் தாக்கம் அதிகம் உள்ளதால், ஏசி பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால், மின் தேவை அதிகரிகரித்துள்ளது. இரவு நேரத்தில் மக்கள், 'ஏசி' சாதனங்களை அதிகமாக பயன்படுத்துகின்றனர். எனவே, மின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

இந்நிலையில் வெப்ப அலை வீசுவதால் தமிழகத்தின் மின்சார தேவை தற்போது வேகமாக அதிகரித்து வருகிறது. மாநிலத்தின் சீரான மின் விநியோகத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் உறுதி செய்து வருகிறது.

கடந்த 30 நந்தேதி அதிகபட்ச மின் தேவை 20,701 மெகாவாட் ஆகும். மேலும் தமிழ்நாட்டின் மின் தேவை தற்போது புதிய உச்சத்தை அடைந்துள்ளது. கோடை வெப்ப அலையின் தாக்கத்தால், தமிழ்நாட்டின் மின் தேவை 20,830 மெகாவாட் என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் வெப்ப அலை காரணமாக நேற்று 2 நந்தேதி முதல் மாநிலத்தின் மின் தேவை புதிய உச்சத்தை எட்டி உள்ளது. இந்த தகவலை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தெரிவித்துள்ளது.

# பழனியில் வைகாசி விசாகத் திருவிழா: 16ம் தேதி கொடியேற்றம்

பழனி, மே.5

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி விசாகத் திருவிழா அறுபடைவீடுகளில் நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டிற்கான விசாகத் திருவிழா வருகிற 16ம் தேதி தொடங்குகிறது. அன்றைய தினம் பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் காலை 9 மணிக்கு மேல் 9.45 மணிக்குள் மிதுன லக்னத்தில் கொடியேற்றம் நடைபெறுகிறது.



திருவிழா நடைபெறும் 10 நாட்களும் வள்ளி, தெய்வானை சமேதராக முத்துக்குமாரசுவாமி சப்பரம், தந்தப்பல்லக்கு, தோளுக்கினியாள், தங்க குதிரை, வெள்ளி யானை, காமதேனு, ஆட்டுக்கிடா, வெள்ளி மயில், தங்கமயில் உள்ளிட்ட வாகனங்களில் சுவாமி வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறும்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் 21ம் தேதி நடைபெறுகிறது. அன்றைய தினம் மாலை 6 மணிக்கு மேல் 7 மணிக்குள் விருச்சிக லக்கனத்தில் வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமார சுவாமிக்கு திருக்கல்யாணம் நடைபெறும். மறுநாள் 22ம் தேதி மாலை 4.30 மணிக்கு வைகாசி விசாக தேரோட்டம் நடைபெறுகிறது.

திருவிழா நடைபெறும் 10 நாட்களும் பெரியநாயகி அம்மன் கோவிலில் பக்தி சொற்பொழிவு, பரத நாட்டியம், பக்தி இன்னிசை, வீனை இன்னிசை, நாட்டுப்புற பாடல் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

விழாவுக்கான ஏற்பாடுகளை பழனி கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேஷ் தலைமையிலான அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

அக்னி நட்சத்திர கழு

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் அக்னி நட்சத்திரக் கழு சித்திரை மாதத்தின் கடைசி 7 நாட்களும், வைகாசி மாதத்தின் முதல் 7 நாட்களும் கடைப்பிடிக்கப்படும். இந்த நாட்களில் காலை மற்றும் மாலை நேரங்களில் பக்தர்கள் பழனி மலையை சுற்றியுள்ள வீதிகளில் கிரிவலம் வருவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டுக்கான அக்னி நட்சத்திர கழு வருகிற 7ந் தேதி தொடங்கி 20ந் தேதி வரை நடைபெறுகிறது. இந்நாட்களில் கிரிவலம் வரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கோவில் நிர்வாகம் செய்து தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னையில் தடையின்றி குடிநீர் விநியோகம் குடிநீர் வாரியம் அறிவிப்பு

சென்னை: மே.5

தமிழகத்தில் வரலாறு காணாத வகையில் வெயில் சுட்டெரித்து வருகிறது. குறிப்பாக வட தமிழக உள் மாவட்டங்களில் வெயில் வறுத்தெடுப்பதால் மக்கள் வெளியே வர முடியாமல் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். அதிகபட்சமாக 110 டிகிரி வரை வெப்பத்தின் தாக்கம் இருந்து வருகிறது. இதனால், மக்கள் மிகுந்த சிரம்மத்திற்கு ஆளாகி வருகின்றனர். இந்நிலையில், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள 200 வார்டுகளில் 85 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு சென்னை குடிநீர் வாரியம் குடிநீரை விநியோகித்து வரும் நிலையில், கோடைகாலத்தில் வறட்சி நிலவும் என்பதால் போதுமான குடிநீர் விநியோகம் செய்யப்படுமா என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்தது.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் தற்போதைய நீர் இருப்பை கருத்தில் கொண்டு சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

பொதுமக்களின் குடிநீர் தேவைக்கு ஏற்ப மாநகரின் கீழ்ப்பாக்கம், புழல், செம்பரம்பாக்கம், வீராணம், சூரப்பட்டு ஆகிய 5 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் நீர் சுத்திகரிக்கப்படுகிறது.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 111 மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகள் மூலம் விநியோகம் செய்யப்படும் நிலையில், சென்னையில் அக்டோபர் மாதம் வரை எவ்வித தங்கு தடையுமின்றி குடிநீர் வழங்கப்படும் என குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பு பொதுமக்கள் இடையே நிம்மதியடைந்துள்ளனர். ஆனால் அதே நேரத்தில் சென்னை தவிர தமிழகத்தின் பிற மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

# வறட்சியால் கருகும் தென்னை மரங்கள்: ரூ.10,000 வீதம் இழப்பீடு வழங்குக அன்புமணி ராமதாஸ்



சென்னை, மே.5

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் அண்மைக்காலங்களில் இல்லாத அளவுக்கு வாட்டும் வெப்பநிலை மற்றும் வறட்சியால் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மட்டும் 2.5 கோடி தென்னை மரங்கள் கருகி வருகின்றன. பணம் கொடுத்துதண்ணீர்வாங்கி வந்து தென்னை மரங்களுக்கு பாய்ச்சும் நிலைக்கு கொங்கு மண்டல விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு மரத்திற்கு ஒரு நாளைக்கு குறைந்து 40 லிட்டர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒரு மரத்திற்கு ஒரு நாளைக்கு தண்ணீர் பாய்ச்ச ரூ.10 முதல் 13 வரை செலவாகும். 1,000 தென்னை மரங்களை வைத்துள்ள விவசாயி , அவற்றுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஒரு மாதத்திற்கு ரூ.4.5 லட்சம் முதல் ரூ.6 லட்சம் வரை செலவழிக்க வேண்டியிருக்கும். பெரும்பான்மையான விவசாயிகளுக்கு இது சாத்தியம் இல்லை. ஆயிரக்கணக்கில் செலவழித்தும் தென்னை மரங்களைக் காப்பாற்ற முடியாத நிலையில், விவசாயிகளின் துயரைத் துடைக்க தமிழக அரசு எந்த முன்னெடுப்பையும் மேற்கொள்ளாதது கண்டிக்கத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சியால் மா, தென்னை, பப்பாளி உள்ளிட்ட அனைத்து பயிர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் தமிழ்நாட்டில் நீர்ப்பாசனத் திட்டங்கள் போதிய அளவில் செயல்படுத்தப்படாததுதான் காரணம். அதை செய்ய கடந்தகால மற்றும் நிகழ்கால ஆட்சியாளர்கள் தவறி விட்ட நிலையில், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

விவசாயிகளின் துயரத்தை தற்காலிகமாக தீர்க்கும் வகையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஒரு மரத்திற்கு ரூ.10,000 வீதம் தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும். இனி வரும் காலங்களில் இத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுக்க நீர் மேலாண்மைத் திட்டங்களை வகுத்து செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாலத்திற்கு அடியில் 3 சடலங்கள் மீட்பு



மேட்டூர், மே.5

சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம் சின்னப்பம்பட்டி செல்லும் சாலையில் உள்ளது பணிக்கனூர். இங்கு ராஜரத்தினம் என்பவருக்கு சொந்தமான தென்னந்தோப்பு அருகே மேம்பாலம் ஒன்று உள்ளது.

இந்த மேம்பாலத்தின் அடியில் இருந்து இன்று கடும் துர்நாற்றம் வீசியது. இதையடுத்து தோட்ட உரிமையாளர் ராஜரத்தினம் சென்று எட்டி பார்த்துள்ளார். அப்போது ஒருவர் உடல் அழுகிய நிலையில் இறந்து கிடந்தார். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அவர் இதுகுறித்து ஜலகண்டாபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து போலீசார் அங்கு விரைந்து சென்றனர். அப்போது அங்கு 2 ஆண்கள் மற்றும் ஒரு பெண் அழுகிய நிலையில் பிணமாக கிடப்பது தெரிய வந்தது. அவர்களுக்கு சுமார் 50 முதல் 60 வயது வரை இருக்கும் என்று தெரிய வந்தது.

பிணமாக கிடந்த அவர்கள் அருகில் ஒரு மொபட்டும், மதுபாட்டில், தண்ணீர் இருந்தது. அவர்கள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவில்லை. மேலும் அவர்கள் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்களா என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அழுகிய நிலையில் பிணமாக கிடந்த 3 பேர் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# யூடியூபர் சவுக்கு சங்கர் கைது: கோவை மாநகர சைபர் கிரைம் போலீசார் நடவடிக்கை



கோவை, மே.5

காவல் துறை அதிகாரிகள் குறித்தும், பெண் காவலர்கள் குறித்தும் அவதூறாக சமூகவலைதளங்களில் பேசிய விவகாரத்தில் யூடியூபர் சவுக்கு சங்கர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேனியில் இருந்த சவுக்கு சங்கரை கைது செய்த கோவை மாநகர சைபர் கிரைம் போலீசார் அவரைகோவைஅழைத்து வர உள்ளனர்.

# தென்காசி மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்பு கட்டிட அரசாணைநிதி ஒதுக்கீடு: அமைச்சர் ரகுபதியிடம், முன்னாள் மாவட்ட செயலாளர் சிவபத்மநாதன் கோரிக்கை

தென்காசி, மே 5

தென்காசி மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்பு கட்டிட அரசாணை நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென அமைச்சர் ரகுபதியிடம், முன்னாள் மாவட்ட செயலாளர் சிவபத்மநாதன் கோரிக்கை மனு அளித்தார்.



இது குறித்து தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதியை முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ.சிவபத்மநாதன் நேரில் சந்தித்து அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: தென்காசி மாவட்டத்திற்கு மாவட்ட நீதிமன்றம் அறிவிக்கப்பட்டு, கடந்த 2 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. தென்காசியை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்ட முதன்மை நீதிமன்றம் அமைய கடந்த 71222 அன்று தமிழ்நாடு அரசு அரசாணை பிறக்கப்பட்டு, நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், கடையநல்லூர் வட்டம், ஆய்க்குடி கிராமம் சர்வே எண் 84 ல் 5.54 ஹெக்டேர் மற்றும் சர்வே எண் 97 1 ல் 01.95.0 ஹெக்டேர் நிலம், தென்காசி மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்பு கட்டிட , உயர்நீதிமன்றத்தில் முன்மொழிவு பரிசீலனை முடிந்து இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

எனவே தென்காசி மாவட்ட அளவிலான ஏறத்தாழ 20க்கும் மேற்பட்ட நீதிமன்றங்கள் ஓரிடத்தில் அமைக்ககூடிய வகையில், வேறு அரசு தீர்வை ஏற்படாத நிலங்கள் ஏதும் பொருத்தமாக இல்லை என்ற நிலையில், மேற்குறிப்பிட்டுள்ள நிலத்தினை தென்காசி மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்பு அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்திற்கான அரசாணை பிறப்பிக்கவும், மாவட்ட நீதிமன்ற கட்டிடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய தேவையான நடவடிக்கைகள்; மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் ரகுபதி, இந்த மனு குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், இது தொடர்பாக அரசாணை பிறப்பிக்கும் வகையில், தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், தமிழக வருவாய்த்துறை அமைச்சருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரனிடம் இது தொடர்பாக மனுவை அளித்திடவும் அறிவுறுத்தினார்.

மேலும் வருகிறசட்டமன்ற கூட்டத்தொடரின் போது நீதிமன்ற கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய் வது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும் என்று கூறினார்.

# வணிகர் தினம்: தமிழ்நாடு முழுவதும் இன்று கடையடைப்பு

சென்னை, மே.5

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் விக்கிரமராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) 41வது வணிகர்தின வணிகர்விடுதலைமுழக்க மாநாடு மதுரை வளையங்குளம், நான்குவழிச் சாலையில் அமைந்துள்ள மாநாட்டு பந்தலில் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா தலைமையில் நடைபெற உள்ளது.

கவிஞர் வைரமுத்து மாநாட்டை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார். அமைச்சர்கள் கே.என்.நேரு, மூர்த்தி, அனிதா ராதாகிருஷ்ணன், பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் மாநாட்டின் முதன்மை சிறப்பு விருந்தினராக பங்கேற்று, விழா பேருரையாற்ற உள்ளனர்.

அன்றைய தினம் தமிழகத்தில் கடைகள், வணிக வளாகங்கள், மொத்த மற்றும் சில்லரை வணிக நிறுவனங்கள், மார்க்கெட்டுகள், உணவகங்கள், மால்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் வணிகர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக விடுமுறை அளித்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் வணிகர்கள் லட்சக்கணக்கில் குடும்பத்துடன் மதுரையில் ஒன்று கூட உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயர் பதிவு செய்ய கால அவகாசம் நீட்டிப்பு

பெரம்பலூர், மே.5

பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயர் பதிவு செய்ய 31.12.2024 வரை கால அவகாசம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது மாவட்ட கலெக்டர் க.கற்பகம் தகவல் தெரிவித்துள்ளார். இது குறித்து மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளத ாவது: பிறப்பு பதிவு குழந்தையின் முதல் உரிமை, பிறப்பு சான்றிதழ் குழந்தையின் சட்டபூர்வ குடியுரிமைக்கான அத்தாட்சி. குழந்தை பிறந்த 21 நாட்களுக்குள் பதிவு செய்து இலவச பிறப்பு சான்றிதழ் பெற பிறப்பு இறப்பு பதிவு சட்டம், 1969 வழி வகை செய்கிறது. பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயரை பதிவு செய்தால் மட்டுமே அது முழுமையான சான்றிதழ் ஆகும்.பிறப்பு சான்றிதழ் குழந்தை பள்ளியில் சேர, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம் பெற, பாஸ்போர்ட், விசா உரிமம், அயல்நாட்டில் குடியுரிமை பெற இன்றியமையாத ஆவணமாக உள்ளது. 01.01.2000 க்கு பிறகு 15 ஆண்டுகள் கடந்த பிறப்பு பதிவுகளுக்கும், குழந்தை பெயர் வைத்து பிறப்பு சான்று பெற 31.12.2024 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. பிறப்பு பதிவு செய்யப் பட்டுள்ள நகராட்சி, மாநகராட்சி அல்லது சம்மந்தப்பட்ட வட்டாட் சியர், பேரூராட்சி அலுவலரிடம் உரிய ஆதாரங்களுடன் (கல்வி சான்று, ஓட்டுநர் உரிமம்) விண்ணப்பிக்கலாம். இவ்வாறான கால அவகாச நீட்டிப்பு இனிவரும் காலங்களில் வழங்கிட இயலாது என இந்திய தலைமை பிறப்பு இறப்பு பதிவாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு பெயருடன் கூடிய பிறப்பு சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# தகாத உறவை கண்டித்தால் சிக்கன் ரைஸில் விஷம் தாத்தாவை தொடர்ந்து தாயும் உயிரிழப்பு

நாமக்கல், மே.5

நாமக்கல் பஸ் நிலையம் எதிரில் ஜீவானந்தம் (32) என்பவர் ஓட்டல் நடத்தி வருகிறார். இந்த ஓட்டலில் கடந்த 30ந் தேதி எருமப்பட்டி அருகே உள்ள தேவராயபுரத்தை சேர்ந்த தனியார் என்ஜினீயரிங் கல்லூரி மாணவர் பகவதி (20) சிக்கன் பிரியாணி சாப்பிட்டு உள்ளார்.



தொடர்ந்து, 7 'சிக்கன் ரைஸ்' பொட்டலம் வாங்கி கொண்டு, வீட்டில் உள்ள தனது தாயார் நதியா (40), தாத்தா சண்முகம் (67) உள்ளிட்ட குடும்பத்தினருக்கு கொடுத்து உள்ளார். இதற்கிடையே 'சிக்கன் ரைஸ்' சாப்பிட்ட நதியா, சண்முகம் ஆகியோருக்கு மட்டும் உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, செயற்கை சுவாசம் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்தனர்.

இதற்கிடையே உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சைபெற்று வந்த கூலித்தொழிலாளி சண்முகம் நேற்று இரவு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார்.

மேலும், இந்த விவகாரத்தில் தாத்தாவை தொடர்ந்து தாய் நதியாவும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் நாமக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நதியா உயிரிழந்துள்ளார். கைது செய்யப்பட்டுள்ள மகன் பகவதியை போலீசார் சிறையில் அடைத்துள்ளனர்.

## "குட் பேட் அக்லி" திரைப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் தேதி அறிவிப்பு

விடாமுயற்சியை அடுத்து நடிகர் அஜித்தின் ஏகே 63 படத்தை ஆதிக் ரவிச்சந்திரன் இயக்குகிறார்.

இப்படத்திற்கு 'குட் பேட் அக்லி' என பெயரிட்டுள்ளது. தேவிஸ்ரீ பிரசாத் இசையமைக்கும் இப்படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கின்றனர்.

படம் 2025ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அஜித் ரசிகர்கள் மிகவும் கொண்டாட்டத்தில் உள்ளனர். இந்நிலையில், குட் பேட் அக்லி திரைப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் தேதியை படக்குழுவினர் இன்று அறிவித்துள்ளனர். அதன்படி, குட் பேட் அக்லி திரைப்படம் வரும் 10ம் தேதி ஐதராபாத்தில் தொடங்க உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.





## மீண்டும் ஜோ நடிகையை ஒகே செய்த ரியோ ராஜ்




2023 ஆம் ஆண்டு அறிமுக இயக்குனரான ஹரிஹரன் ராம் இயக்கத்தில் ரியோ ராஜ் மற்றும் மாளவிகா மனோஜ் இணைந்து நடித்து ஜோ திரைப்படம் வெளியாகி மக்களிடையே விமர்சனம் ரீதியாகவும் வசூல் ரீதியாகும் நல்ல வரவேற்பை பெற்றது.

இதைத்தொடர்ந்து ஜோ பட ஜோடி அடுத்து மீண்டும் ஒன்றாக இணைந்து நடிக்கவுள்ளனர். இப்படத்தை அறிமுக இயக்குனரான கலையரசன் தங்கவேல் இயக்கவுள்ளார். இச்சமூதாயத்தில் ஆண்கள் படும் கஷ்டத்தை பற்றி பேசும் படமாக இது இருக்கும் என இயக்குனர் தெரிவித்துள்ளார்.

இயக்குநர்கள் ஹரி, முத்தையா ஆகியோரை வைத்து, பல வெற்றித் திரைப்படங்களைத் தயாரித்த "ட்ரம்ஸ்டிக்ஸ் புரொடக்ஸன்ஸ்" நிறுவனம் சார்பாக, மணிகண்டன் கந்தசுவாமியின் மேற்பார்வையில் , அறிமுக இயக்குனர் "பிளாக் ஷீப்" கலையரசன் தங்கவேல் இயக்கத்தில் இந்த படம் உருவாகிறது. பிளாக் ஷீப் நிறுவனத்தின் இணை தயாரிப்பில் உருவாகும் இந்தத் திரைப்படத்தில், "ஜோ" திரைப்படத்தின் வெற்றி ஜோடியான ரியோ மாளவிகா மனோஜ் மீண்டும் இணைகிறார்கள். மாதேஷ் மாணிக்கத்தின் ஒளிப்பதிவு, சித்துகுமார் இசை, வருண் கே.ஜி.யின் எடிட்டிங், வினோத் ராஜ்குமாரின் கலையமைப்பு, சந்துருவின் டிசைன், மீனாட்சியின் ஆடை வடிவமைப்பு, என ஒரு மெகா இளைஞர்கள் கூட்டணியில் இப்படம் உருவாக உள்ளது. இந்த வருட பிற்பகுதியில் வெளியிட திட்டமிட்டுள்ளனர். படத்தின் பூஜை விழா இன்று சென்னையில் சிறப்பாக நடைப்பெற்றது.

## Bloody Beggar ஆக மாறிய கவின் புதிய அப்டேட்

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் இயக்குனர்களில் நெல்சன் திலிப்குமார் முக்கியமானவர். ரஜினிகாந்த் நடிப்பில் இயக்கிய ஜெயிலர் திரைப்படம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. உலகளிவில் 600 கோடி ரூபாய் வசூலித்தது குறிப்பிடத்தக்கது. அதை தொடர்ந்து சமீபத்தில் நெல்சன் அவரது தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார். அதற்கு ஃபிலமண்ட் பிக்சர்ஸ் என பெயரிட்டுள்ளார்.




அந்த நிறுவனம் தயாரிக்கும் முதல் படத்தின் தகவலை இன்று வெளியிட்டார். நெல்சன் தயாரிப்பில் கவின் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குனரான சிவபாலன் முத்துகுமார் இயக்கவுள்ளார். இவர் இதற்கு முன் நெல்சன் திலிப்குமாரிடம் உதவி இயக்குனராக பணியாற்றியுள்ளார். படத்திற்கு "Bloody Beggar" என தலைப்பிடப்பட்டுள்ளது. இப்படத்தின் டைட்டில் ரிவீலிங்க் வீடியோவை நகைச்சுவை பாணியில் நெல்சன், ரெடின் கிங்ஸ்லி, கவின், சிவபாலன் ஆகியோர் நடித்து வெளியிட்டுள்ளனர். வீடியோ காட்சிகள் தற்பொழுடு வைரலாகி வருகிறது. கவின் தற்பொழுது நடித்து இருக்கும் ஸ்டார் படம் வரும் மே 10 ஆம் தேதி வெளியாகவுள்ளது. அடுத்தடுத்து வித்தியாசமான கதைக்களத்தில் நடித்து வருகிறார் கவின்.

## அனிமேட்டட் சீரிஸாக வருகிறது 'பாகுபலி கிரவுன் ஆப் பிளட்'

கடந்த 2015ம் ஆண்டு ராஜமவுலி இயக்கத்தில் பிரபாஸ், ராணா டகுபதி, நாசர், சத்யராஜ், ரம்யா கிருஷ்ணன் மற்றும் பலர் நடித்து வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்ற படம் பாகுபலி. தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் வெளியான இப்படம், உலக அளவில் ரூ.600 கோடியைக் கடந்ததாக தகவல் வெளியானது. இதையடுத்து இப்படத்தின் இரண்டாம் பாகம் 2017ம் ஆண்டு வெளியாகி முதல் பாகத்தை விட அதிக வசூல் ஈட்டியது. உலகமுழுவதும் ரூ.1000 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது.



இந்த நிலையில் பாகுபலி படத்தின் முன் கதை அனிமேஷன் வடிவில், வெப் சீரிஸாக வெளியாகிறது. 'பாகுபலி: கிரவுன் ஆப் பிளட்' என்ற தலைப்பில் வருகிற 17ம் தேதி டிஸ்னி ஹாட்ஸ்டார் ஓ.டி.டி தளத்தில் வெளியாகிறது. இந்த சீரிஸின் கதை பாகுபலி படத்தின் முன் நடிந்த கதையைப் பற்றி என தெரிவித்துள்ளனர்.

இந்த வெப் சீரிஸை ராஜ மௌளி மற்றும் ஷரத் தேவராஜன் இணைந்து உருவாக்கியுள்ளனர். ஷரத் தேவராஜன் இதற்கு முன் தி லெஜண்ட் ஆஃப் அனுமன் அனிமேட்ட் சிரீஸை இயக்கியவர். அது மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்றது.

'பாகுபலி கிரவுன் ஆப் பிளட்' அனிமேட்ட் சீரிஸில் பாகு மற்றும் பல்வால்தேவாவின் வாழ்க்கையின் ரகசியத்தை பிரதிபலிக்கும் வகையில் மற்றும் நீண்ட நாட்களுக்கு முன் மறைக்கப்பட்ட உண்மைகளும் , மகிஷ்மதி சாம்ராஜியத்தின் பற்றிய ரகசியங்களை பல டிவிஸ்டுகளுடன் இந்த சீரிஸ் இருக்கும் என ராஜ மௌளி தெரிவித்துள்ளார். இந்த சீரிஸின் டிரைலர் தற்போது வெளியாகியுள்ளது. இந்த டிரைலர் தற்போது பலரது கவனத்தை ஈர்த்துள்ளது .

## அர்ஜூன் தாஸ் படத்தின் "சாரல் சாரல்" பாடல் வீடியோ வெளியீடு

மௌன குரு, மகாமுனி போன்ற படங்களை இயக்கியவர் சாந்தகுமார். அடுத்ததாக 'ரசவாதி தி அல்கெமிஸ்ட்' என்ற படத்தை இயக்கியுள்ளார்.



படத்தின் கதாநாயகனாக அர்ஜூன்தாஸ், தாநாயகியாக தன்யா ரவிச்சந்திரன் மற்றும் ரம்யா சுப்ரமணியன், ஜி.எம்.சுந்தர், சுஜித் சங்கர், ரேஷ்மா வெங்கடேஷ், சுஜாதா, ரிஷிகாந்த் உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு தமன் இசையமைத்துள்ளார். படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்து வருகிற மே 10ந் தேதி திரைக்கு வர உள்ளது. படத்தின் டிரைலர் சில நாட்களுக்கு முன் வெளியாகி மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. யூடியூபில் இதுவரை 20 லட்ச பார்வையை ரசவாதி டிரைலர் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. படத்தில் அர்ஜூன் தாஸ் சித்த மருத்துவர் கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். அவரது கடந்த கால விஷயம் ஒன்று அவரது ஆன்மாவை துளைத்துக் கொண்டிருக்கிறது. போன்ற கதைப்பின்னணியில் அமைந்துள்ளது. படத்தின் முதல் பாடலான சாரல் சாரல் பாடலின் வீடியோ தற்பொழுது யூடியூபில் வெளியாகியுள்ளது. இப்பாடலில் தன்யா ரவிச்சந்திரன் மற்றும் அர்ஜூன் தாஸ் இருவருக்கும் உள்ள காதல் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. பாடல் காட்சிகள் சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிறது.

## கோலிவுட்டை மீட்டெடுக்குமா 'அரண்மனை 4' ?

சுந்தர் சி இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் அரண்மனை 4. இந்த படத்தின் முதல் மூன்று பாகங்களை போன்றே இந்த படத்திலும் சுந்தர் சி நடித்துள்ளார். இவருடன் தமன்னா, ராஷி கண்ணா, யோகி பாபு, கோவை சரளா, விடிவி கணேஷ் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.


ஹிப்ஹாப் ஆதி இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். குஷ்பு சார்பில் அவ்னி சினிமாக்ஸ் இப்படத்தை தயாரித்துள்ளனர். மே 3 { இன்று} திரையரங்குகளில் வெளியானது. நேற்று திரைப்பிரபலங்களுக்கு திரைமுன்னோட்டம் காட்சியிடப்பட்டது. அதைப் பார்த்த அனைவரும் படம் நன்றாகவுள்ளது என கருத்துக்களை பகிர்ந்தனர்.

சென்னையில் உள்ள பெரும்பாலான திரையரங்களிலும் மால்களில் உள்ள திரையரங்குகளில் இன்று ஹவுஸ் ஃபுல்லாக ஓடிக்கொண்டு இருக்கிறது. படம் பார்த்த பெரும்பாலானோர் பாசிடிவ் ரிவியுகளை சமூகவலை தளங்களில் பகிர்ந்துக் கொண்டு வருகின்றனர். இதைத்தொடர்ந்து அடுத்த 2 நாட்களுக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து திரையரங்களிலும் வேகமாக அரண்மனை 4 படத்திற்கு புக்கிங் பதிவாகி வருகிறது. சுந்தர்.சி அவரது மற்ற பாகங்களை போலவே இப்படத்தை எடுத்து இருந்தாலும். இந்த பாகத்தில் விஸ்வல் எஃபக்ட்ஸ்களும், நகைச்சுவை காட்சிகள் மற்றும் திகில் காட்சிகள் நன்றாக வொர்க் அவுட் ஆகியுள்ளது. சமீபத்தில் தமிழ் படங்களில் ரீரிலீஸ் படங்களே அதிகம் திரையரங்குகளில் ஓடுகிறது கில்லி படத்தின் ரீ ரிலீஸ் மக்களிடம் பெரும் ஆதரவு பெற்றது. அதைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் முன்பு அஜித்குமார் பிறந்தநாளை முன்னிட்டு வெளியான தீனா, பில்லா போன்ற படங்கள் கில்லியைப் போல் வரவேற்பு கிடைக்கவில்லை. இந்நிலையில் மலையாள திரைப்படங்களுக்கு கிடைத்த ஆதரவு கூட சமீபத்தில் வெளிவந்த தமிழ் திரைப்படங்களுக்கு கிடைக்கவில்லை.இச்சூழ்நிலையில் தற்பொழுது அரண்மனை 4 வெளியாகியுள்ளது.

கோடை விடுமுறைக்கு தக்க சமயத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொண்டாடும் திரைப்படமாக இது அமைந்துள்ளது அரண்மனை 4. இப்படத்திற்கு மக்களிடையே பெருமாதரவு பெற்று வெற்றியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தோனி கையெழுத்திட்ட ஜெர்சியை பரிசாக பெற்ற 103 வயது ரசிகர்

சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஐபிஎல் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் சேப்பாக்கத்தில் நடந்தது.

இந்த போட்டியில் இந்திய அணியின் பிரபல கிரிக்கெட் வீரர் எம்.எஸ். தோனி ஆடினார். அப்போது அவரது ஆட்டத்தின் போது ரசிகர்கள் உற்சாக மிகுதியில் ஆரவார கோஷமிட்டனர். ஆனாலும் பஞ்சாப் அணி இந்த போட்டியில் எளிதாக வென்றது.

இந்நிலையில் சென்னையை சேர்ந்த 103 வயது ராம்தாஸ் என்பவர் தோனியின் தீவிர கிரிக்கெட் ரசிகர். இவர் தோனி பங்கேற்கும் கிரிக்கெட் போட்டியை தவறாமால் பார்த்து ரசிப்பார்.

தற்போது ஐபிஎல் கிரிக்கெட்டில் தோனி ஆட்டத்தை பார்த்து ரசித்துள்ளார். இது பற்றி கேள்விபட்ட தோனி 103 வயதான அந்த ரசிகரைநேரில் சந்தித்து அவருக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்து வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

மேலும் அந்த ரசிகருக்கு தனது கையொப்பமிட்ட சிறப்பு பரிசாக ஜெர்சி சட்டை ஒன்று வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

எம்.எஸ்.தோனி 103 வயது ரசிகருக்கு சிறப்பு பரிசு வழங்கிய வீடியோ தற்போது இணைய தளத்தில் வைரலாகி வருகிறது. இது தொடர்பாக ரசிகர்கள் தோனியை பாராட்டி வருகிறார்கள்.

## ஆர்.சி.பி. அணியுடன் பிறந்தநாள் கொண்டாடிய அனுஷ்கா சர்மா



பாலிவுட் நடிகைகளில் முன்னணி நடிகையான அனுஷ்கா சர்மா 2008 ஆம் ஆண்டு வெளிவந்த ரப் நே பனா தி ஜோடி திரைப்படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமானார். இவரும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான விராட் கோலியும் காதலித்து வந்தனர்.

இவர்கள் இருவருக்கும் 2017 ம் ஆண்டு காதல் திருமணம் நடந்தது. 2021 ஜனவரி மாதம் வாமிகா என்ற பெண் குழந்தை பிறந்தது. இவர்களுக்கு கடந்த பிப்ரவரி மாதம் ஆண் குழந்தை பிறந்தது. அவருக்கு அகாய் என்று பெயரிட்டுள்ளனர்.

இந்த நிலையில் அனுஷ்கா ஷர்மா, விராட்கோலி விளையாடும் முக்கிய போட்டிகளில் எல்லாம் களத்திற்கு வந்து அவரை உற்சாகப்படுத்த என்றுமே தவறியதில்லை. சமீபத்தில் நடைபெற்ற உலககோப்பை தொடரில்விராட்கோலிதனது 50வது சதத்தைபூர்த்தி செய்தபோது அனுஷ்கா சர்மா, முத்தங்களை பறக்கவிட்டு உற்சாகத்தை கொடுத்தார். தற்போதும் கூட ஐபிஎல் தொடரில் RCB அணியில் விளையாடும் விராட் கோலியை அவ்வபோது சந்தித்து உற்சாகப்படுத்தி வருகிறார்.

இந்த நிலையில் அனுஷ்கா ஷர்மா கடந்த மே 1ந்தேதி அன்று தனது 36வது பிறந்த நாளை வீராட் கோலியின் RCB நண்பர்களுடன் சேர்ந்து பிறந்தநாள் கொண்டாடினார். இதன்புகைப்படங்கள்சமூகவலைதளங்களில்வைரலாகி வருகிறது.

## உங்களது மதிப்புமிக்க அறிவுரைக்கு நன்றி.. டோனி குறித்து முஸ்தஃபிசுர் உருக்கமான பதிவு

ஐபிஎல் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதுவரை நடந்த போட்டிகள் முடிவில் முதல் 4 இடங்கள் முறையே ராஜஸ்தான், கொல்கத்தா, லக்னோ, ஐதராபாத் ஆகிய அணிகள் உள்ளன. இந்த புள்ளிபட்டியலில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 5 வெற்றி 5 தோல்வியுடன் 5வது இடத்தில் உள்ளது.





சென்னை அணிக்கு பேட்டிங் சிறப்பாக இருந்தாலும் பந்து வீச்சு கவலை அளிக்கும் விதமாக உள்ளது. முஸ்தஃபிசுர் தவிர மற்ற பந்து வீச்சாளர்கள் ரன்களை வாரி வழங்கி வருகின்றனர். இதனால் வெற்றி பெற போட்டியில் கூட சென்னை அணி தோல்வியை சந்தித்து வருகிறது.

சிஎஸ்கே அணிக்கு பந்து வீச்சுக்கு பக்க பலமாக இருந்த வங்காள தேச வீரர் முஸ்தஃபிசுர் ரகுமான் சிஎஸ்கே அணியில் இருந்து விடை பெற்றார். ஜிம்பாப்வே அணிக்கு எதிரான டி20 தொடரில் விளையாடுவதற்காக சிஎஸ்கே வீரர் முஸ்தஃபிசுர் வங்கதேசம் திரும்பினார்.

இந்நிலையில் அவரது இன்ஸ்டாகிராம் பதிவு தற்போது வைரலாகி வருகிறது. அந்த பதிவில் எல்லாவற்றுக்கும் நன்றி மஹி பாய். உங்களைப் போன்ற லெஜண்டுடன் சேர்ந்து விளையாடியது மிகச்சிறந்த அனுபவமாக இருந்தது. உங்களது மதிப்புமிக்க அறிவுரைகளுக்கு நன்றி.

அவற்றை எப்போதும் நினைவில் வைத்திருப்பேன். உங்களை மீண்டும் சந்திக்கவும், மீண்டும் உங்களுடன் சேர்ந்து விளையாடவும் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

இவ்வாறு அவர் பதிவிட்டிருந்தார்.

## ரிங்கு சிங் மனம் தளரக்கூடாது: இது தொடக்கம்தான் கங்குலி



டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ரிங்கு சிங்கிற்கு இடம் கிடைக்கவில்லை. டி20 உலகக் கோப்பைக்கான எதிர்கால திட்டத்தில் 26 வயதான ரிங்கு சிங் இடம் பிடித்திருந்தார். என்றாலும் பிசிசிஐ நான்கு சுழற்பந்து வீச்சாளர்களுடன் செல்ல திட்டமிட்டதால் ரிங்கு சிங்கிற்கு இடம் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இது தொடக்கம்தான், ரிங்கு சிங் மனம் தளரக் கூடாது என கங்குலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கங்குலி கூறுகையில் "போட்டி நடப்பது வெஸ்ட் இண்டீஸ். ஆடுகளங்கள் மெதுவாகவும், சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாகவும் இருக்கும். ஆகவே, அவர்கள்(தேர்வாளர்கள்) கூடுதலாக ஒரு ஸ்பின்னருடன் (4 பேர்) செல்ல விரும்பியுள்ளனர். இதனால் ஒருவேளை ரிங்கு சிங்கிற்கு வாய்ப்பு கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், இது தொடக்கம்தான். இதற்காக அவர் மனம் தளரக் கூடாது.

தேர்வு செய்யப்பட்டுள்ளது சிறப்பான அணி. அனைவரும் மேட்ச்வின்னர்கள். 15 பேரும் தேர்வுக்கான வீரர்கள். ரோகித் சர்மா, ராகுல் டிராவிட் சிறந்த ஆடும் லெவனை தேர்வு செய்வார்கள் என்பதை நான் நம்புகிறேன்" என்றார்.



**பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல்**

**விளக்கம்:**
பிறனுடைய உரிமையாகிய மனைவியைவிரும்பிநடக்கும்அறியாமை, உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.